Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 10 ஆம் நாள் முஹர்ரம் 10 (23-5-64) சனிக்கிழமை இதழ் 102

ஈழநாடு அறிவொளி
என்னும்
விஞ்ஞான மலர்
7 - 6 - 64
ஈழநாடு இதழுடன் வெளியாகின்றது
"மக்பெத்திற்கும் விஞ்ஞானத்
தமிழிற்கும் தொடர்பு உண்டா ?
ஒட்டக்கூத்தரின் இரட்டைத் தாழ் பாழ்
விஞ்ஞான வழககிற்கு உகந்ததல்ல"
—விஞ்ஞானத்தமிழ், அறிவொளி.

# இடதுசாரி முன்னணிக்கு என். எம். எச்சரிக்கை!

## "பிலிப் தமது கூற்றை வாபஸ் பெருவிடில் பிரிந்து செல்வோம்"

### சுதந்திரக்கட்சியுடன்சமசமாஜிகள் கூட்டுசேர்வர்?

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களான டாக்டர் என். எம். பெரேராவுக்கும் திரு. பிலிப் குணவர்த்தனவுக்குமிடையில் முன்னணியின் கமிட்டிக் கூட்டத்தில் ஏற்பட்ட மோதல் இடதுசாரி முன்னணிக்குள் பெரும் பிளவாக உருவெடுத்துக்கொண்டிருப்பதாகவும் இதன் விளைவாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் மட்டுமே சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்குமென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இடதுசாரி முன்னணிக் கமிட்டிக் கூட்டத்தில் டாக்டர் பெரேராமீது திரு. பிலிப் குணவர்த்தன மறைமுகமாக சுமத்திய குற்றச்சாட்டை திரு. பிலிப் குணவர்த்தன பகிரங்கமாக வாபஸ் பெருவிட்டால் சுதந்திரக் கட்சியுடன் லங்கா சமசமாஜக்கட்சி தனியாகக் கூட்டு சேரும் என்று டாக்டர் என். எம். பெரேரா, இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

இதேசமயம் திரு. பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி.யும் சமசமாஜக் கட்சிக்கு ஒரு எச்சரிக்கை விடுத்துள்ளது. இடதுசாரி முன்னணிக் கமிட்டிக் கூட்டத்திலிருந்து டாக்டர் பெரேரா வெளிநடப்புச் செய்தபின், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பிலிப் குணவர்த்தனவைத் தாக்கிப் பேசியதாகவும் டாக்டர் கொல்வின் தாம் பேசியதை பகிரங்கமாக வாபஸ்பெற வேண்டுமென்றும் எம். ஈ. பி, கேட்டுள்ளது.

இடதுசாரி ஐக்கியமுன்னணியிலுள்ள இரண்டு கட்சிகளான சமசமாஜக்கட்சிக்கும் எம். ஈ. பிக்குமிடையில் தோன்றியுள்ள இந்த வேற்றுமையை நீக்கி சமரசம் ஏற்படுத்த கம்யூனிஸ்ட் கட்சியினர் எடுத்த முயற்சிகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை.

**சமசமாஜக்கட்சி மகாநாடு**

அடுத்த மாத ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் மகாநாடு நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாட்டில் டாக்டர் என். எம். பெரேராவின் திட்டத்துக்கு அமோக ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது இடது

(5-ம் பக்கம் பார்க்க)

## 394 அரசாங்க ஊழியர் வேலை இழப்பர்?

கொழும்பு, வெள்ளி

அரசாங்கசேவையில் வெவ்வேறு தரத்திலுள்ள 394 ஊழியர்களுக்கு, அவர்கள் அரசகரும மொழியான சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்திற்காக, பதவி நீக்க உத்தரவுகள் வழங்கப்படவிருக்கின்றன.

1956-ம் ஆண்டு முதல் 1961-ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இந்த ஊழியர்களுக்கு 1956-ம் ஆண்டுக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களுக்கு சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுவதற்காக வழங்கப்பட்ட 2 வருட சலுகை வழங்கப்படமாட்டாது. இந்த ஊழியர்கள் அனைவரும் சிங்களத்தில் கடமையாற்றுவோம் என்ற உறுதியளித்த தன் பேரிலேயே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாவர். இவர்கள் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்பே சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியவர்களென்றும், இன்றுவரை இந்த 394 பேரும் சிங்களத்தில் தேர்ச்சியடையவில்லையாதலால் இவர்கள்மீது எத்தகைய நடவடிக்கை தாங்கள் எடுக்கவேண்டுமென்றும், நீதி அமைச்சு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

புகையிரதப் பகுதியைச் சேர்ந்த 18 அதிகாரிகள், கோடீசுவரன் வழக்கில் இலங்கை சேரியின் 560 இல. சுற்றுநிருபம் செல்லாதெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதால் தமக்கு அனுப்பப்பட்டுள்ள கட்டாய ஓய்வு உத்தரவுகள் செல்லுபடியாகாதென்றும் அவற்றை வாபஸ் வாங்கும்படியும் கோரும் தனித்தனிக்கடிதங்களைப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். இந்தக் கடிதங்களிலே 1956-ல் மந்திரி சபை செய்த முடிவின் சில பகுதிகளைக் குறிப்பிட்டு அந்த முடிவுக்கு முரணாக இப்போது அரசாங்கம் நடந்துகொள்கிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கமோ தொடர்ந்து கட்டாய ஓய்வு உத்தரவுகளை அனுப்பி வருகுறது. புகைபிரதநிலைய உதவி அதிபர் திரு. கே. சிற்றம்பலம் சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லை என்பதற்காக கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப்பட்டுள்ளார், இவருடன் கட்டாய ஓய்வு உத்தரவு பெற்றவர்களின் தொகை 51 ஆகிறது. புகையிரதப் பகுதியில் மட்டும் 38 தமிழ் ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது இவர்களுள் 30 குமாஸ்தாக்கள். 5 புகையிரதநிலைய அதிபர்கள். 1 புகையிரதநிலைய உதவி அதிபர். 1 தலைமைக் காரட் ஆகியோர் உளர்.

புகையிரதப்பகுதி சிப்பந்திகளில் 29 பேர் சிங்களத்தில் தேர்ச்சியடையத் தவறின், ஜூலை மாதம் 16-ந் திகதி ஓய்வு பெற நேரிடும்.

## லாவோஸுக்கு இந்தியவைத்திய அணி

புதுடில்லி, மே 22

லாவோஸ் நெருக்கடியைத் தீர்க்க உதவும் எந்த ஆலோசனைகளிலும் மகாநாடுகளிலும் கலந்துகொள்ள இந்தியா தயாராக இருக்கிறதென்று இந்தியப் பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

இன்று காலை புதுடில்லியில் நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில்தான் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

லாவோஸ் நெருக்கடியைத் தீர்க்க ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவோ அல்லது மகாநாட்டைக் கூட்டவோ பெரும் வல்லரசுகளினால் தான் முடியுமெனறும் எந்தவிதக் கூட்டங்களிலும் இந்தியா கலந்துகொள்ளும் என்றும் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

லாவோஸில் நடுநிலைமைப் படைகளைத் தாக்கிவரும் பதடலாவோ துருப்புகளுடன் வட வியட்னாம் படைகளும் சேர்ந்துள்ளனவா என்பது பற்றித் தமக்கு உத்தியோக பூர்வமாகஅறிவிக்கப்படவில்லை என்றும் பிரதமர் நேரு கூறினார்.

லாவோஸுக்கு வைத்திய அணியொன்றை அனுப்பி வைக்குமாறு லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா எம்மைக் கேட்டிருந்தார். அவரின் செய்தி இன்று காலை தான் எங்களுக்குக் கிடைத்தது. இந்திய வைத்திய அணியொன்று லாவோஸுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும பிரதமர் நேரு கூறினர்.

## ஒருநாள் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கோஷ்டிக்கும் கொழும்பு செசன். பெனடிக்ஸ் கல்லூரி கோஷ்டிக்குமிடையே இன்று காலை கிரிக்கெட் போட்டியொன்று நடைபெறும். ஒருநாள் மட்டும் நடைபெறும் இக் கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 38-வது தொடர்ச்சி தேசிய கைத்தொழில் சுவீப்பின் முடிவுகள் பின்வருமாறு:

முதலாவது பரிசு
17 P 0311 — ரு. 1 லட்சம்
இரண்டாவது பரிசு
12 A 0468 — ரு. 10 ஆயிரம்
மூன்றாவது பரிசு
20 K 0212 — ரு. 4 ஆயிரம்.

(2-ம் பக்கம் பார்க்க)

## ரயில்வந்தும் தபால் இல்லை!

யாழ்ப்பாணம், சனி

தபால் இனவாரியாக வகுப்பவர்கள் மேலதிக வேலை செய்தால் அதற்கான மேலதிக பணம் யாழ்ப்பாணத் தபால்பகுதி மான்யத்தில் ஒதுக்கப்படாமையால், காலை 10-30 மணியளவில் தபாற்கந்தோரை அடைந்த வெளியூர்க் கடிதங்களை நேற்று பொதுமக்களுக்கு விநியோகஞ்செய்ய முடியவில்லை. இன்று வந்துசேரும் கடிதங்களுடனேயே நேற்றைய கடிதங்களும் கொடுபடும்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

'துயரப்படும் மக்களே! ஒன்றை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் துயரங்களுக்குக் காரணம், நீங்களே! ஜனன மரணச் சக்கரத்தில் உங்களை மாட்டி வைத்து அதன் ஆயக்கால்களை நீங்கள் ஆர்வத்தோடு பற்றிக் கொண்டு வேதனைப்படும்படி வெளியேறியுள்ள எவரும் செய்ய வில்லை.

— புத்தபிரான்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

ஸ்ரீமுகமலை குரோதி ஆண்டு
வைகாசி ௴ 10 ௳ (23-5-64)


## பென்ஷன் பணம்!

உத்தியோக மொழிச் சட்டம் காரணமாக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பலர் இன்னும் தங்களுக்குரிய 'பென்ஷன்' பணம் பெறமுடியாதிருப்பதாக புகார் செய்துள்ளனர். ஓய்வுபெற்று ஐந்து மாதம் கடந்தும் அவர்களுக்கு 'பென்ஷன்' கிடைக்கவில்லையாயின் இதுபற்றி யாரும் மகிழ்ச்சியடைய முடியாது.

ஓய்வுபெற்றவர்களெல்லோரும் வாழ்க்கை வசதியுடையவர்களல்லர். சொற்ப 'பென்ஷன்' பணத்தை நம்பியே பலரும் வாழ்கின்றனர். அவர்கள் மட்டுமல்லாது அவர்களது உழைப்பை நம்பி வாழ்ந்தவர்களும் இந்தப் பணத்தை நம்பி வாழ்கின்றனர். உத்தியோக மொழி என்று புதிய மொழியைப் படித்து உத்தியோகம் பார்க்க முடியாது என்ற நிலையில் 'பென்ஷன்' பணத்தையும் இழந்துவிடக் கூடாதே என்ற அச்சத்தினால் தான் பலரும், உரிய காலத்துக்கு முன்னரே ஓய்வுபெற்றனர். இந்தப்பணத்தைக் கொடுப்பதில் தாமதம் செய்வது எள்ளளவும் நியாயமாகாது. கொதிக்கும் கும்பியின் சாபத்தைத் தேடுவதாகும்.

'பென்ஷன்' கோரி ஆங்கிலத்தில் செய்யப்படும் மனுக்கள் மனுதாருக்கே திருப்பி அனுப்பப்படுவதாகவும் கூறப்படுகிறது. உத்தியோக மொழியில் எழுதப்படும் மனுக்களே கவனிக்கப்படுமென்றும் உத்தியோக மொழியில் கடிதம் எழுதுமாறும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனராம். இது 'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த' கதையாகவுள்ளது. எந்த மொழியைப் படித்து அதில் வேலைபார்க்க முடியாதெனத் தெரிவித்து வேலையை இழந்தார்களோ அதே மொழியில் அரசாங்கத்துடன் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் "பென்ஷன்' வேண்டுமென்றாலும் உத்தியோக மொழியைப் படித்துத்தானாகவேண்டுமென்று" கூறுவதும் சரியல்ல. இது வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையையே காட்டுகிறது. அரசாங்கத்துடன் தமக்குத் தெரிந்த மொழியில் தொடர்புகொள்ளும் உரிமையை மீறுவதுடன் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் எழுதப்படும் கடிதங்களுக்கு அந்த மொழிகளில் பதில் அல்லது அந்த மொழிகளின் மொழிபெயர்ப்பு இணைத்துப் பதிலளிக்கப்படுமென்ற அரசாங்கத்தின் பிரகடனத்துக்கும் முரணாகும்.

'பென்ஷன்' பணம் அரசியல் விஷயமல்ல; உத்தியோக மொழிச் சட்டம் அமுல் சம்பந்தமானதுமல்ல. உயிர்வாழ்வதற்கு மூலாதாரமான பண விஷயம். இதில் விளையாடுவதோ, வஞ்சம் தீர்ப்பதோ நிச்சயம் யாருக்கும் நன்மை தராது. நிதிமந்திரி இவ்விஷயத்தில் உடன் கவனமெடுத்துப் பட்டினி கிடக்கும் வயிற்றுக்குப் பால் வார்க்காவிட்டாலும் 'பழையதாவது' வார்க்கட்டும்!

# கால் நூற்றாண்டு இலக்கியப் பணி புரிந்த கனக. செந்திநாதன்

— 'ஈழு' —

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேலாக இலங்கையின் இலக்கியப் போக்கையும், ஆக்க சிருஷ்டிகளையும் அவதானித்து படித்தின் புற்றுத் தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்று அவற்றை அவ்வப்போது இரசித்து, நயந்து எழுத்துருவில் வடித்துத் தந்த கனக. செந்திநாதனுக்கு கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கத்தினர் இன்று இரசிகமணிப்பட்டம் வழங்கவிருப்பதை முன்னிட்டு அவரைப்பற்றிய இக்கட்டுரை இங்கு இடம் பெறுகிறது.

உண்மையான கலைஞன் கலையோடு ஒன்றிவிடுகிறான். கலை அவனது வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததாக அமைய வேண்டும். கலையே மூச்சாக— அதன் பண்பே கொள்கையாக வாழ்வை தன்வயத்ததாக்குகின்றது.

இந்த உண்மைக் கலைக்கோர் உதாரண புருடனாகதிரு. கனக. செந்திநாதனைக் காண்கின்றோம். இலக்கியம் என்பதன் மூச்சாக—சதா அதனைக் கனவாக்கி—வாழ்வின் பிடிப்போடு அதனை இணைய வைத்துள்ள இலக்கிய உருவமே என்றால் அது மிகைப்பட்ட வார்த்தையாகாது.

இன்று ஈழத்தில் இலக்கியம் பற்றி பலபட மாறுபட்ட கொள்கைகள் அலசப்படுகின்றன. தேசியம், எதார்த்தம், நிதர்சனம் ஆகிய வார்த்தைகளை வலிந்து பிடித்து இலக்கியமென்றால் பூமியின் மண்ணிலே—புழுதியிலே பாதங்கள் படிகின்றதாக இருக்க வேண்டுமென்றும், மேல் வீட்டிலே இருந்து கொண்டு கீழே பாராது அந்தர வெளியிலே கற்பனையைச் சிதறவிடுவதல்லவென்றும் புதுப்புது வியாக்கியானங்கள் கொடுக்கின்றார்கள். இத்தனை கற்பனா வாதக் கதைகளும் இடம்பெறாத காலகட்டத்தில் சொந்த நாட்டின் எண்ணங்களை— மரமைப்பேணி இலக்கியம் படைக்க வேண்டுமென்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தருவன் மிக முன்னோடியாக விளங்குபவர் கனக. செந்திநாதன். ஆங்கில மொழி போன்ற பிற மொழிப் பயிற்சியில்லாத இவர் தனித் தமிழ் ஆசிரியராக இருந்து கொண்டே கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய முயற்சி செய்து அத்துறையில் தனக்கென, தனியிடம் வகுத்துக் கொண்டார்.

கலைப்பயிற்சிகளில் சிறந்தவர்கள் வெளிநாட்டார்கள் தாம்; இலங்கை மண்ணில் பிறந்தவர்கள் திறமையற்றவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை ஊடுருவி இருந்த காலகட்டத்தில் நம்நாட்டு மக்களும் கலைகளில் மேம்பாடுடையர் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டிய முன்னோடியாக விளங்குகின்றார் அவர்.

1938-ம் ஆண்டு தொடங்கி ஈழகேசரிப் பத்திரிகையில் நாவல், சிறுகதை, நாடகம், இலக்கிய விமர்சனம் ஆகிய பல துறைகளில் ஈடுபட்டுச் சிருஷ்டி கர்த்தாவாக விளங்கிய கனக.செந்திநாதன் இலக்



திரு.கனக.செந்திநாதன்

கிய விமர்சனத்துறையிலேயே சிறந்து விளங்கினர். ஈழநாட்டின் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் நடைபெற்ற இலக்கிய முயற்சிகளையும், இலக்கியப் போக்கையும் விரிவாகச் சொல்லக் கூடியவருள் முன்னணியில் நிற்கிறார்.

சொந்த வாழ்க்கையைப் பற்றியும், தனிப்பட்ட இஷ்ட இலட்சியங்களில் மனதைத் தோய விட்டது இலக்கிய உலகத்து நிகழ்ச்சிகளில் தன்னை முற்றும் முழுதாக அர்ப்பணித்து ஆக்கப்பணி புரிவதிலேயே காலத்தைக் கடத்தி வந்திருக்கின்றார். தனிப்பட்ட வாழ்க்கையில் அதிகம் தோயாத கர்மயோகி இவர் என்பதை நெருங்கியவர்கள் அனுபவ சாத்தியமாக அறியலாம். புகழையோ, வெறுப்பையோ, போலிக் கௌரவத்தையோ அக்கறைப்படுத்தாத இவரின் சுத்த சுபாவம் ஒரு சிலருக்குத் தவறான அர்த்தத்தைக் கற்பித்ததுமுண்டு.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியமேமூச்சாகக் கொண்டு வாழும் இவரைப் பல தடவைகள் சொந்த வாழ்வின் சோகங்கள் சிறைப்பிடித்திருக்கின்றன. அந்த வேளையிலெல்லாம் அவரின் இலக்கியப்பற்றே மிகுந்து நின்றிருக்கின்றது. 29-6-62-ல் சிரேஷ்ட புத்திரி செல்வி பராசக்தி தனது 20-வது வயதில் அகால மரணமடைய நேரிட்டது. அந்த வேதனையை— தந்தையின் மனநிலையை— தகப்பனாக இருப்பவர்களால் தான் புரிந்துகொள்ள முடியும். பாசத்தைக் கொட்டி, தோள்மீதும், மார்மீதும் தூக்கித் திரிந்த முதற்புதல்வியினைப் பிரிந்த வேதனை வேளையது. மரணச் சடங்கில் கலந்தவர்களிடம் கூட—அந்த வேதனையிலும் இலக்கியம் பற்றிப் பேசி—தனது துன்பத்தை மறக்க முற்பட்டவர் இவர். மகளின் அந்தியேஷ்டியின் போது புதுமையான முறையில், தனது இலக்கிய உள்ளத்தை வெளியிட்டு— "ஈழத்துக் கவிமலர்கள்" என்னும் கவிதைத் தொகுதியை வெளியிட்டார். வாழ்விலும் தாழ்விலும் இலக்கியம் பற்றியே எண்ணுகின்ற இவரது கலகலப்பான பேச்சும், கயவஞ்சகமற்ற சிரிப்பும் இவரிருக்குமிடத்தை மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இலக்கியப் பரிச்சிய ஈடுபாட்டுக்கு உடல் நலத்தை ஆகுதியாக இட்டு சதைவடிந்து—மெலிந்த தோற்றத்துடனும் கையில் இரணத்துடன் இன்று காணப்படுகின்றார். அந்த நோயாளியான நிலையிலும் தனது உடற்சக்திக்குட்பட்ட வகையில் இலக்கியப் பணிபுரிவதில் சளைத்து விடவில்லை. தான்பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்ற குறிக்கோளுடன் மென்மேலும் இவரது இதயம் இலக்கியத் தொண்டு புரிவதில் இளமையோடுதான விளங்குகின்றது.

1938-ம் ஆண்டிலிருந்து உபகுப்தன், பரிதி, செவ்வேல்,வேல், பரதன் ஆகிய புனைபெயர்களுக்குள் சிருஷ்டி இலக்கியங்களைச் செய்து வந்தபோதிலும், 1955-ம் ஆண்டு ஈழத்துப் பேனா மன்னர்கள் என்னும் எழுத்தாளர்களின் அறிமுகக் கட்டுரைத் தொடரைக் கரவைக் கந்தப்பனார் என்ற புனைபெயரில் வெளியிட்ட பின்னரே கனக. செந்திநாதனுக்கு உரிய பிரபலம் கிடைத்துள்ளது.

இன்று சனிக்கிழமை மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நடைபெறும் காப்பியப் பெருவிழாவில் இவரது கால்நூற்றாண்டு இலக்கியச் சேவை குறித்து வெள்ளிவிழா ஒன்றை ஒரு அங்கமாகச் செய்து அதில் "இரசிகமணி" என்னும் பட்டத்தை வழங்க கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் முடிவு செய்திருப்பது பாராட்டப்பட வேண்டியதே.

## கைத்தொழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 400 பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 26 K 0389 | 30 W 0808 |
| 23 N 0265 | 26 H 0581 |
| 29 A 0396 | 01 U 0613 |
| 23 G 0482 | 12 J 0715 |
| 18 L 0737 | 07 G 0523 |
| 23 H 0450 | 20 R 0617 |
| 13 G 0875 | 03 T 0512 |
| 31 K 0440 | 03 T 0381 |
| 01 P 0926 | 27 I 0145 |
| 07 C 0484 | 26 M 0655 |
| 08 S 0614 | 06 N 0333 |
| 21 S 0950 | 18 J 0991 |
| 17 L 0556 | 06 F 0117 |
| 13 R 0345 | 11 W 0343 |
| 17 B 0747 | 17 B 0218 |
| 12 H 0414 | 06 Z 0141 |
| 14 W 0854 | 32 Y 0048 |
| 08 K 0027 | 10 Z 0504 |
| 03 X 0892 | 08 Q 0570 |
| 19 U 0604 | 12 W 0267 |
| 22 L 0064 | 11 H 0493 |
| 07 L 0032 | 24 B 0321 |
| 30 T 0348 | 06 T 0693 |
| 21 B 0574 | 27 N 0615 |
| 20 S 0882 | 27 D 0378 |
| 27 D 0059 | 20 B 0941 |
| 04 E 0298 | 01 X 0218 |
| 28 K 0422 | 20 D 0991 |
| 31 P 0676 | 02 Z 0598 |
| 27 V 0259 | 05 X 0556 |
| 30 A 0240 | 27 N 0283 |
| 23 D 0931 | 28 J 0363 |
| 08 P 0043 | 10 F 0253 |
| 21 D 0878 | 03 I 0026 |
| 17 W 0656 | 19 M 0324 |
| 23 W 0405 | 17 H 0871 |
| 32 L 0836 | 06 H 0907 |
| 12 P 0782 | 05 I 0533 |
| 22 V 0245 | 25 J 0579 |
| 28 G 0810 | 20 K 0625 |
| 21 C 0969 | 02 H 0843 |
| 20 Y 0886 | 25 A 0113 |
| 22 P 0343 | 11 H 0432 |
| 08 R 0256 | 18 L 0024 |
| 02 R 0335 | 23 A 0777 |
| 11 G 0500 | 17 X 0154 |
| 02 Q 0087 | 09 B 0060 |
| 10 J 0341 | 02 E 0556 |
| 05 T 0652 | 13 C 0091 |
| 16 Z 0580 | 23 D 0584 |

ஆசிரியருக்கு கடிதம்

## காலசக்கர கணித சந்தேகம்

யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் கணித வாக்கியப் பஞ்சாங்கங்களில் கூறப்படும் இடவோட்டு நட்சத்திரங்களாகிய திருவாதிரை—உத்தரம்—கேட்டை—சதயம் இவற்றின் பாதங்களுக்கு கூறப்படும் காலசக்கர புத்திகளுக்கும் கெ. வி. வெங்கட்டராமனால் 1954-ம் ஆண்டு ஆவணி மாதம் பெங்களூர் பி. வி. ராமனால் வெளியிடப்பட்ட சோதிட மாதாந்த வெளியீட்டில் கூறப்பட்டுள்ள கலாசக்கரதிசை புத்திகளுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதைக் கண்டேன்.

சோதிட சாஸ்திரத்தில் ஆயுள்பாகம் அதிக முக்கியமானது பராசரரிஷி கூறிய பவ தசாபுத்திகளில் யோக பலன் அறிய உடுசாவும் ஆயுளில் வரும் கத்துக்களை அறிந்து அதற்கேற்ப சாந்தி, தெய்வவழிபாடுகளைச் செய்ய காலசக்கரதியும் மிகமுக்கியமானதென்று நமது முன்னோர் அவற்றைக் கைக்கொண்டனர்.

மேலும் அவர்கள் பலதீபிகையில் ரிஷிமந்தரேசரால்கூறியவாறு உடுதசாவை சௌரமான வருஷப்படியும் காலசக்ரதசாவை சாவனமான வருஷப்படியும் கணித்து வந்தார்கள். பலனும் ஒத்து நடந்தது. இப்போ அந்தக் கணிதமுறை மாறிவிட்டது. பக்திக்கும் அருளுக்கும் உதவியாயிருந்த சைவ வழிபாடுகள், லோகாயமதத்தின் ஞானகாண்டமாகிய மாயாவாததத்துடன் கலப்புற்றதுபோல் நம் ரிஷிகளால் வேதவாக்காய் கூறப்பட்ட சோதிட நூல்களும் ஆங்கில யுரானஸ் நெப்சுயூன் கிரகங்களின் பலன்களுடன் கலப்புற்று பக்தியும் பலனுமற்று உலகில் ஒரே குழப்பமாய் காட்சி அளிக்கிறது.

ஆகவே எஞ்சி இருக்கும் இந்தக்கால சக்ரதிசையின் கதியும் உடுதசாவின் கதியாகாமல் மேற்கூறிய இடவோட்டு நட்சத்திர பாதங்களுக்கு கூறிய புத்திமதிகளை பி. வி. வெங்கட்டராமன் கூறியதுடன் ஒத்துப்பார்த்து எது சரி எது பிழை என்பதை பல சைவர்களின் நன்மைக்காய் பிரகரிக்கும்படி யாழ்ப்பாணக் கணித, வாக்கிய பஞ்சாங்ககாரர் இருவரையும் தாழ்மையாய் வேண்டிக் கொளகின்றேன்.

வே. சுவாமிநாதன்
கல்வயல்,
சண்டிலிப்பாய்.

## ஒரே தமிழ் பாடசாலை

நக்குவாளை, வெள்ளி

அடுத்த வருடத்தில் இங்கு தமிழ்ப் பாடசாலை என்ற ரீதியில் சென். ஜோன்ஸ் சிரேஷ்ட தமிழ் பாடசாலை மட்டுமே செயல்படும். அரசினர் முஸ்லிம் பாடசாலையிலும் சென். அந்தோனியார் பாடசாலையிலும் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் அடுத்த வருடத்தில் சென் ஜோனஸ் சிரேஷ்ட தமிழ் பாடசாலையில் கல்வி பயிலவேண்டிய நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

அரசினர் முஸ்லிம் பாடசாலையில் அடுத்த வருடம் முதல் முஸ்லிம் மாணவர்கள்மட்டுமே சேர்க்கப்படுவார்கள். சென். அந்தோனியார் பாடசாலையில் சிங்கள மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்படுவர்.

சென். ஜோன்ஸ் பாடசாலைக்கு புதிய கட்டடமொன்று 1965-ல் நிறுவப்படும்.

தலா ரூபா 200 பெறும் டிக்கெட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 17 A 0311 | 17 M 0311 |
| 17 B 0311 | 17 N 0311 |
| 17 C 0311 | 17 Q 0311 |
| 17 D 0311 | 17 R 0311 |
| 17 E 0311 | 17 S 0311 |
| 17 F 0311 | 17 T 0311 |
| 17 G 0311 | 17 U 0311 |
| 17 H 0311 | 17 V 0311 |
| 17 I 0311 | 17 W 0311 |
| 17 J 0311 | 17 X 0311 |
| 17 K 0311 | 17 Y 0311 |
| 17 L 0311 | 17 Z 0311 |

# லாவோஸில் அமெரிக்க உளவு விமானங்கள்

## சுவர்ணபூமாவின் கோரிக்கைமீது அனுப்பப்பட்டுள்ளன

### லாவோஸ் நெருக்கடி முற்றுகிறது

ஜார்ஸ்சமவெளி, மே 22

லாவோஸ் நடுநிலைமைப்பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவின் வேண்டுகோளுக்கிணங்க, லாவோஸில் ஜார்ஸ் சமவெளிக்கு மேலாக அமெரிக்க ஜெட்விமானங்கள் உளவறியும் வேலையில் இப்பொழுதுஈடுபட்டுள்ளன" இந்தவிமானங்கள், கம்யூனிஸ்ட் பதட்லாவோ துருப்புகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும். உளவறியும் ஜெட்விமானங்களில் எந்தவித ஆயுதங்களும் இல்லையென்று அமெரிக்க பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துவரும் லாவோஸ் நெருக்கடி குறித்து லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ணபூமா, அமெரிக்காவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார், பதட்லாவோ படைகளைக் கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அவர் அமெரிக்காவைக் கேட்டிருந்தார். இக்கோரிக்கையை தொடர்ந்து அமெரிக்கா பல ஆயுதம் இல்லாத உளவறியும் ஜெட்விமானங்களை லாவோஸுக்குஅனுப்பிவைத்துள்ளது

ஜார்ஸ் சமவெளிக்கு மேலாகப் பறந்துசெல்லும் அமெரிக்காவின் உளவறியும் ஜெட் விமானங்கள், நடுநிலைமைப் படைகளுடன் தாக்குதல்கள் நடத்திவரும் கம்யூனிஸ்ட் பதட்லாவோ துருப்புகள் நடமாட்டத்தைக் கண்காணித்து லாவோசுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் சமிஷனிடம் தெரிவிக்கும்.

**சுவர்ணபூமா கோரிக்கை**

முற்றிவரும் லாவோஸ்நெருக்கடி குறித்து ஜெனிவா மகாநாட்டு 14 நாடுகளும் உடனடியாக மீண்டும் கலந்தாலோசிக்கவேண்டுமென்றுலாவோஸ் பிரதமர் கேட்டுள்ளார்.

**ரஷ்யா பதில்**

லாவோஸ் நிலைமை குறித்து சோவியத் யூனியனுக்கு லாவோஸ் பிரதமர் சுவர்ணபூமா இம்மாதம் 12-ம் திகதி அனுப்பிய கடிதமொன்றுக்கு சோவியத் யூனியன் நேற்று பதிலனுப்பியுள்ளது. "லாவோஸ் நெருக்கடி குறித்து கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் நீங்கள் நடத்தும் பேச்சுக்கள் வெற்றியடையட்டும்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1962ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்களை ரஷ்யா கடைப்பிடிக்கிறதென்றும் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஸ்டீவன்ஸன் யோசனை**

அமெரிக்க தலைமைப் பிரதிநிதி திரு. ஸ்டீவன்ஸன் நேற்று நியுயோர்க்கில் முன்னறிவிப்புக் கொடுக்காமல் பல கூட்டங்களை நடத்தினர். லாவோஸ் நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமென்ருல் 1962-ம் ஆண்டு இயற்றப்பட்ட ஜெனிவா உடன்படிக்கையின் படி, லாவோஸிலிருந்து அந்நிய இராணுவ துருப்புகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று திரு. ஸ்டீவன்ஸன் யோசனை கூறியுள்ளார்.

**லாவோஸில்**

லாவோஸில் ஜார்ஸ் சமவெளிக்கு வெளியே இருக்கும் நடுநிலைமைப் படைகளும் இப்பொழுது ஒரு அணியாகத் திரளுவதில் ஈடுபட்டுள்ளன. பதட்லாவோ படைகளின் மேலும் தாக்குதல்களைச் சமாளிக்கும் பொருட்டே இந்தவித நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**அமெரிக்காவருத்தம்**

லாவோஸ் நெருக்கடி குறித்து அமெரிக்கா மிகுந்த வருத்தம் கொண்டுள்ளதென்றும் இதை மிகவும் மோசமாக அமெரிக்கா கருதுகிறதென்றும் அமெரிக்க வெளிவிவகார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## நாஸர்-குருஷ்சேவ் பேச்சு

கெய்ரோ, மே 22

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரும், சோவியத் பிரதமர் குருஷ்சேவும் நேற்று அலெக்ஸாந்திரியாவில் மீண்டும் சந்தித்து பேச்சுகள் நடத்தினர்.

—

## செய்திக்கு மறுப்பு

ரங்கூன், மே 22

"பர்மாவில் 1; 10; 100 ரூபாய் இனிமேல் புழக்கத்தில் இருக்கமாட்டாது" என்று பர்மா அரசாங்கம் அறிவித்ததாக வெளியான செய்தியை அரசாங்கம் மறுத்துள்ளது.

—

## தகராறு கிடையாது

சென்னை, மே 22

"எனது டைரக்ஷனில் உருவாகிய 'தெய்வத் திருமக'ளில் எம். ஜி. ஆர். நடிக்காததை யிட்டு எனக்கும் எம். ஜி. ஆருக்குமிடையே ஏதோ தகராறு இருப்பதாகப் பலர் எண்ணுகிருர்கள். ஆனல் அவருக்கும் எனக்குமிடையே எதுவிதமான தகராறும் கிடையாது. எனது அடுத்த தயாரிப்பான 'தாய்க்குலத் தலைமகன்' என்ற படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கதாநாயகனை நடிக்கிருர்" என்று பிரபல தயாரிப்பாளரும் தேவர் பிலிம்ஸ் உரிமையாளருமாகிய சான்டோ சின்னப்ப தேவர் ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

மலேஸியா தகராறு

## முத்தரப்பு மகாநாடு ஞாயிறன்று நடைபெறும்?

கோலாலம்பூர், மே 22

மலேசிய தகராறு குறித்து இவ்வார இறுதியில் மலாயா மலைப்பிரதேசமொன்றில் முத்தரப்பு தலைவர்கள் மகாநாடொன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கோலாலம்பூரிலுள்ள தாய்லாந்து வெளிவிவகார மந்திரி நேற்று மலேசிய பிரதமர் திரு. அப்துல் ரஹ்மானுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தோனேஷிய — மலேசிய எல்லையில் இராணுவ சூன்ய பிரதேசமொன்றை அமைப்பது சம்பந்தமாக மலேசிய பிரதமருடன் அவர் பேச்சுக்கள் நடத்தியதாக கூறப்படுகிறது. இந்த திட்டத்தை இவ்வார இறுதியில் நடைபெறும் மகாநாட்டில் அவர் சமர்ப்பிப்பார்.

மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, கமரோன் மலைப்பகுதிக்கு விஜயம் செய்வார். அநேகமாக உத்தேச மகாநாடு இங்கு நடைபெறலாமென்று அவதானிகள் கூறுகின்றனர்.

முத்தரப்பு மகாநாட்டில் இந்தோனேஷியா, மலேஷியா தலைவர்களுடன் தாய்லாந்து வெளிவிவகார மந்திரியும் கலந்துகொள்வார். மலேசிய பிரதமருடன் பேச்சுக்கள் நடத்திவரும் பிலிப்பைன்ஸ் விசேஷ பிரதிநிதி திரு. லூப்பேயும் இம் மகாநாட்டில் கலந்துகொள்வார் என்று கூறப்படுகிறது.

தென் கிழக்காசியாவில்

## இராணுவ தலையீடுகளை அமெரிக்கா சகிக்காது!

### ஸ்டீவன்ஸன் எச்சரிக்கை

நியுயோர்க், மே 22

தென் கிழக்காசியாவில் ஏற்படும் இராணுவ தலையீடுகளை அமெரிக்கா சகிக்காது என்று அமெரிக்க பிரதிநிதி திரு. ஸ்டீவன்ஸன் இங்கு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும் தென்வியட்னுமும் தமது நாட்டை ஆக்கிரமிப்புச் செய்கின்றன என்று கம்போடியா தெரிவித்த புகாரைத் தொடர்ந்து ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதம் தொடர்ந்து நடைபெறுகின்றது. கம்போடியா தெரிவித்திருந்த குற்றச்சாட்டுகளை அமெரிக்கா மறுத்துள்ளது.

இதுசம்பந்தமாக அமெரிக்க பிரதிநிதி திரு. ஸ்டீவன்ஸன் தெரிவிக்கையில் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில்தான் அமெரிக்கா தலையிட்டிருக்கிறதென்றும் தென் வியட்னமிலும் தாய்லாந்திலும் கம்யூனிஸ்டுகளின் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவதே அமெரிக்காவின் குறிக்கோள் என்றும் கம்போடியா தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளில் எந்தவித உண்மையும் கிடையாதென்றும் கூறினர். தென் கிழக்காசியாவில் இராணுவத் தலையீடுகள் ஏற்பட்டால் அவற்றைப் பார்த்துக் கொண்டு அமெரிக்கா பொறுமையாகவிருக்காதென்றும் அவர் எச்சரித்தார்.

14 நாடுகள் கொண்ட ஜெனிவா மகாநாட்டை கூட்ட வேண்டுமென்ற பிரான்ஸ் யோசனையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

—

## 4 லட்சம் கைதிகள்

புதுடில்லி, மே 22

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகள் தொகை இப்பொழுது நான்கு லட்சத்துக்கு மதிகமாகிட்டதென்று அறிவிக்கப்பட்டுள்ளது

## "சீனவை சேர்க்காதவரை சமாதானம் நிலைக்காது"

### லண்டனில் புட்டோ

லண்டன், மே 22

கம்யூனிஸ்ட் சீனவை சேர்க்காதவரை உலகில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முடியாதென்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ தெரிவித்துள்ளார்.

லண்டனில் நேற்றிரவு நடைபெற்ற நிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில்தான் திரு. புட்டோ மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய—சீன எல்லைச் சண்டைகள் பற்றிய கேள்வியொன்றுக்கு திரு. புட்டோ பதிலளிக்கையில், இந்தியா தான் முதலில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டதென்றும், பொருளாதாரத்தை விட இந்தியா தனது இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளையே துரிதப்படுத்தி வருகின்றது என்றும் கூறினர்.

"இந்தியா தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும்பொருட்டு பல நாடுகளிலுமிருந்தும் உதவிகள் பெற்று வருகின்றது. இந்திய பாதுகாப்பு மந்திரி சாவன் இப்பொழுது அமெரிக்காவில் பேச்சுக்கள் நடத்திவருகின்ருர். பிரிட்டனிலும் அவர் உதவி கோர வரவிருக்கின்ருர். இந்தியாவுக்கு அமெரிக்கா பல இராணுவ உதவிகளையும் அளிப்பதால் பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த அபாயம் குறித்து நாம் பல தடவைகளில் அமெரிக்காவை கண்டித்திருக்கிரேம்" என்றும் திரு. புட்டோ தெரிவித்தார்.

"ஐக்கிய நாடுகள் சபையில் கம்யூனிஸ்ட் சீனவையும் சேர்க்கவேண்டுமென்று நாம் பல தடவை கோரியுள்ளோம். ஐ. நா. விலும், மற்றும் உலக ஸ்தாபனங்களிலும் சீனவுக்கு அங்கத்துவம் கொடுக்காதவரை தென் கிழக்காசியாவில் சமாதானத்தை நிலைபெறச் செய்யமுடியாது"என்றும் திரு. புட்டோ குறிப்பிட்டார்.

திரு. ஷேக் அப்துல்லாவின் பாகிஸ்தான் வருகை குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்; காஷ்மீர் தலைவர் திரு. ஷேக் அப்துல்லா பாகிஸ்தானுக்கு விஜயம்செய்வதால் பல நன்மைகள் ஏற்படலாமென்று கூறினர். ஷேக் அப்துல்லா விடுதலைசெய்யப்பட்டதன் மூலம், காஷ்மீர்மக்கள் பெரும் வெற்றியீட்டியுள்ளார்கள். காஷ்மீரின் எதிர்காலம் காஷ்மீர் மக்களையே சார்ந்திருக்கிறது. அவர்களின் எதிர்காலத்தை வளமுள்ளதாக்க அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும் என்றும் திரு. புட்டோ கூறினர்.

## சந்தர்ப்பம் வரும்பொழுது இந்தியாவை சீன மீண்டும்தாக்கும்

### வாஷிங்டனில் சாவன் அறிவிப்பு

### காவல்நிலைகளை சீன உறுதிப்படுத்துகிறதாம்

வாஷிங்டன், மே 22

1962-ம் ஆண்டில் இந்தியாவைச் சீன தாக்கியபொழுது மேற்கொண்ட நடவடிக்கைகளைவிட இப்பொழுது சீன தனது பாதுகாப்பு முஸ்தீபுகளை அதிகரித்துள்ளதென்றும் இந்தியாவை மீண்டும் தாக்குவதற்குச் சீன உரிய தருணத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறதென்றும் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு வாஷிங்டனில் நடைபெற்ற தேசிய பத்திரிகைச் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தான் திரு. சாவன் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். அமெரிக்காவிடமிருந்து இந்தியாவுக்கு பாதுகாப்பு உதவிகள் பெறுவது குறித்து பேச்சுகள் நடத்தும் பொருட்டு திரு. சாவன் இங்கு வந்துள்ளார்.

சீனவின் நடவடிக்கைகள் குறித்து திரு, சாவன் பேசுகையில் சீனவின் பாதுகாப்பு நடவடிக்கைகள் இப்பொழுது அதிகரித்துக்கொண்டு வருகிறதென்றும் இந்திய எல்லைக்குச் சமீபதில், தனது நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதில் அவர்கள் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டிருக்கிருர்கள் என்றும் கூறினர்.

தங்களுக்கு உகந்த சௌகரியமான சந்தர்ப்பத்தைச் சீனர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிருர்கள். தருணம் வரும்பொழுது அவர்கள் மீண்டும் இந்தியாவைத் தாக்குவார்கள் என்றும் திரு. சாவன் அச்சம் தெரிவித்தார்.

சீனவுடன் பாசிஸ்தான் நெருங்கிய உறவுகொண்டிருப்பதால் இந்தியாவைப் பெரும் அபாயம் எதிர்நோக்கியுள்ளது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் கண்டு சீன பொருமை கொள்கிறது. மற்றுமொரு தாக்குதல் நடத்தி இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திகளை வீழ்ச்சியடையச் செய்யச் சீன முயற்சிக்கிறது. ஆனல் சீனவின் தாக்குதல்கள் இனி வெற்றிபெற முடியாது. தாக்குதல்களைச் சமாளிக்க இந்தியா தயாராகிவிட்டதென்றும் திரு. சாவன் குறிப்பிட்டார்.

இந்திய மண்ணிலிருந்து சீனவை விரட்டியடிக்க இந்தியாவிடம் திட்டமிருக்கிறது. ஆனல் இந்தத் திட்டம் எப்பொழுது எவ்விதத்தில் அமுலாகுமென்பதும் அந்தத் திட்டம் எப்படியானதென்பதும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டுமென்றும் சாவன் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் பேச்சுகள் நடத்தும் பேச்சுகள் சம்பந்தமாக அவர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் அமெரிக்க பாதுகாப்புக் காரியதரிசி திரு. மக்னமாராவுடன் தாம் உபயோகமான பேச்சுகளை நடத்திவருவதாகவும் பேச்சுகள் நல்ல சூழ்நிலையில் நடைபெறுகின்றனவென்றும் கூறினர்.

## கட்சியிலிருந்து விலக்கப்படுவார்

கொழும்பு, வெள்ளி

கம்யூனிஸ்ட்கட்சியின் சீன ஆதரவாளர் கோஷ்டி, வழக்கறிஞர் திரு. தீசா விஜரத்தினவை "உம்மை எமது கோஷ்டியிலும் கிளையிலிருந்தும் ஏன் விலக்கக்கூடாது என்பதற்குக் காரணம் தருக" எனக் கேட்டிருக்கிறது.

திரு. திசா விஜயரத்தின, திரு. விக்கிரமசிங்கா, திரு. கெனமன் ஆகிய ரஷ்ய ஆதரவாளர்களுடன் தொடர்பு கொள்கிறாரென்றும் இடதுசாரி ஐக்கிய முன்னணி தொழிலாளர்களுக்குப் பாதகமாக இருந்தபோதிலும் அதை ஆதரிக்கிறாரென்றும் ரஷ்ய ஆதரவாளரின் கம்யூனிஸ சித்தாந்த நூல்களை விற்கிறாரென்றும் சீன ஆதரவாளராற் குற்றஞ் சாட்டபபட்டுள்ளார்.

திரு. தீசா விஜயரத்ன இது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் குழந்தைத்தனமான இந்த இடதுசாரிகளின் நடவடிக்கை குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை என்றார்.

— —

## தடி குற்றியதால் சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், சனி

ஏழாலை வடக்கைச் சேர்ந்த இராசையா துரைசிங்கம் என்ற 12 வயதுப் பையன் விளையாடிக் கொண்டு நிற்கும் பொழுது காலில் தடிகுற்றியதால் ஏற்பட்ட காயம் காரணமாக இரண்டு வாரங்களின் பின் ஏற்பட்ட வலியினால் மரணமானார்.

இப்பையனின் மரணம் குறித்து யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை செய்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் பி. சண்முகராசா சாட்சியமளித்தபோது தடிகுற்றிய காயத்தின் விளைவாக ஏற்பட்ட வலியினால் மரணமானாரென அபிப்பிராயப்பட்டார்.

இயற்கை மரணமெய்தியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## லாபம் சதம் 10; அபராதம் ரூ. 2500

உடுநுவரை, வெள்ளி

அதுல ஸ்ரோர்ஸ் சொந்தக்காரர் ஏ. டபிள்யூ. ஜயசேகரா 5 அவுன்ஸ் புளி 26 சதமாக விற்றதற்காக ஒருநாட் சிறைத்தண்டனையும் 2500ரூபா அபராதமும் விதிக்கப்பட்டார். 5 அவுன்ஸ் புளியின் கட்டுப்பாட்டுவிலை 16 9/16 சதமாகும்.

அபராதம் விதித்த கண்டி மாஜிஸ்டிரேட் திரு. வி. வி. உடலகம உணவுப பொருட் தட்டுப்பாடு நிலவுகிறதென்றும் அதைச் சாக்காக வைத்துக்கொண்டு வியாபாரிகள் கொள்ளைலாபம் அடிக்கிறார்களென்றும் குறிப்பிட்டார்.

— —

## புயல்

டாக்கா, மே 22

டாக்காவில் நேற்று சுமாரான புயல் வீசியது பல வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. ஆட் சேதம் இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## "பிழை ஏதும் நடக்கவில்லை"

கொழும்பு, வெள்ளி

இந்தச் சம்பவத்தில் இடம் பெற்றதாகச் சொல்லப்படும் பெண்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ கடற்படை வீரர்களின் நடவடிக்கை மோசமானதென முறைப்பாடு செய்யவில்லை. முறைதவறிய செயல் ஏதாவது நடந்திருந்தால் பொதுஜனங்களிடமிருந்து நிச்சயம் முறைப்பாடு வந்திருக்கும். எனவே 'கஜபாகு' காலியில் நங்கூரமிடப்பட்டவரையில் கடற்படை வீரர் நடந்துகொண்ட முறை சரியானதென நான் கருதுகிறேன்." இவ்வாறு முன்னைநாள் அரசாங்க அதிபர் திரு. ஏ. எஸ். நவரத்தினராஜா, கஜபாகு கப்பலின் கடற்படை வீரரின் நடத்தை குறித்து விசாரணை நடத்தும் குழுமுன் சாட்சியமளிக்கையில் குறிபபிட்டார்.

இந்த விசாரணைக்குழுவில் திருவாளர்கள் பி. எச். டி. சொய்ஸா (தலைவர்), எச். ஆர். ஹமீத், டி. பி. குரே, பி. வி. மகாதேவா (செயலாளர்), டி. ஆர். பொன்சேகா ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

கொழுமபு, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் மட்டக்களப்புக் கிளையின் 100 ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு கடமையாற்றிய ஊழியர்களில் சரிபாதிப் பேர் அம்பாறைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர். இது மட்டக்களப்பு கிளையை மூடுவதற்கான ஆரம்ப முயற்சியே என அஞ்சுகின்ற ஊழியர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக வேலை நிறுத்தம்செய்யத் தீர்மானித்துள்ளனர். மட்டக்களப்புக் கிளை 45 பாதைகளில் பஸ் சேவை நடாத்துகிறது. வேலை நிறுத்தமேற்பட்டால் இந்த 45 பாதைகளிலும் பஸ்சேவை பாதிக்கப்படலாமென பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

— —

பத்திரிகைக் கமிஷன்

## "தூற்றுவதே தொழில்"

கொழும்பு, வெள்ளி

"இலங்கைப் பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டபோது எண்ணெய்க்கம்பனி முதலாளிகளிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. அப்போது பத்திரிகைகள் பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட லாபம் குறித்து எதுவுமே பேசவில்லை. மாறாகக் கூட்டுத்தாபனத்தால் அரசாங்கத்துக்கேற்பட்ட சில்லறை நஷ்டங்களையே பெரிதுபடுத்தித் தலையங்கங்கள் தீட்டின. பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்ட முதல் 8 மாதங்களுக்குள் 5·7 இலட்சம் ரூபா இலாபம் கிடைத்தது. இதைப் பற்றி எந்தப் பத்திரிகையும் மூச்சுக்கூட விடவில்லை". முன்னைநாள் உழைக்கும் பத்திரிகையாளரும், பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பொதுஜன சேவா தொடர்பதிகாரியுமான எல். ஏ. பி. பெரேரா பத்திரிகைக்கமிஷன் முன் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"இலங்கைப் போக்குவரத்துச்சபை ஸ்தாபிக்கப்பட்ட காலிலிருந்தே அந்தச் சபையை வன்மையாகக் கண்டிப்பதைத் தமது முக்கிய பணியாகப் பத்திரிகைகள் வரித்துள்ளன என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. முதலாளிகளிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட 3000 பஸ்களில் 1500 உபயோகத்துக்குதவாதவை. அரசாங்கம் பஸ்களைப் பொறுப்பேற்கப் போகிறது என்பதைத் தெரிந்துகொண்ட பஸ் முதலாளிகள் பஸ்கள் சீர்குலைவைப் பற்றிக் கவனமற்றிருந்தார்கள். போக்குவரத்துச் சபை நிர்மாணிக்கப்பட்டதும் புதிதாக 100 புதிய பாதைகளில பஸ் சேவை ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதனால் பஸ் பற்றாக்குறைஏற்பட்டது. இது அரசாங்கத்தின் தவறல்ல. போக்குவரத்துச்சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு உயர்ந்த வேதனம ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இதைப்பற்றி எதுவுமே குறிப்பிடாமல் குறைகளை மட்டும் பத்திரிகைகள் சுட்டிக்காட்டுவது அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டும் என்ற அவற்றின் பிடிவாதமான மனப்போக்கையே காட்டுகிறது".




# வானொலிநிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 23-5-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-00 என். கே. பத்மநாதன் — நாகஸ்வரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 வி. விஜயசிங்கம் — பாட்டு, 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 24-5-64

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த போதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறுபாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வி. சிவராஜா — பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 ஜெகதாம்பிகை ஆனந்தநாயகம் — பாட்டு, 7-30 நாடகம் — "சீதனமும் காதலும்" — உடப்பு வேலாயுதம் எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வெசாக் — விசேஷநிகழ்ச்சி, 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.

## திருச்சி

### சனி 23-5-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள் — பாடுபவர் போத்தக்குடி எஸ். எம். அஹமத்.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 எஸ். ஜி. கிட்டப்பன், 1-50 வாத்தியஇசை, 2-10 எஸ். ஆர். வேங்கடரமணசர்மா — வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்தியஇசை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 செங்குருதி — நாடகம், விமலா ரமணி எழுதியது, 8-00 எஸ். ஆர். வேங்கடரமணசர்மா — வயலின், 9-35 மொஹர்ரம் மௌல்விசையத் அப்துல்கனி — பேச்சு, 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி — எஸ். பாலச்சந்தர் — வீணை.

### ஞாயிறு 24-5-64

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 தஞ்சாவூர் வி. பிரேமா — பாட்டு, 8-15 திருவெண்காடு ஏ. ஜயராகன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 3-00 கும்பகோணம் வி. பி. ராஜேஸ்வரி — பாட்டு.

மாலை 5-15 தஞ்சாவூர் வி. பிரேமா — பாட்டு.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-45 ராமநாதபுரம் எம். என். கணேசபிள்ளை — வயலின், 8-45 குரலிசை, 10-00 நடனம் ஆடினார் — இசைச் சித்திரம்.

# விபத்தினால் ஏற்பட்ட மரணம்

யாழ்ப்பாணம், சனி

ஒரு கோவில் திருவிழாவில் அலங்காரம் செய்வதற்கென ஒரு லொறியில் சப்பரத்தின் உதிரி உறுப்புகளைச் சென்ற 20-ந் திகதி ஏற்றும்பொழுது இரு தட்டுகள் 50 வயது நிரம்பிய மீசாலையைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்தம்பி என்பவரின் தலையில் விழுந்ததன் காரணமாக திரு. சின்னத்தம்பி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அடுத்த நாள் மரணமானார். அவருடன் சேர்ந்து அத்தட்டுக்களை லொறி மீது ஏற்றிய லொறிச் சாரதி அப்பாப்பிள்ளை சுப்பிரமணியம் காயமடைந்தார்.

திரு. சின்னத்தம்பியின் மரணம் பற்றி யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை செய்தார்.

இவ்விசாரணையில் சாட்சியமளித்த டாக்டர் வே. சரவணபவன், திரு. சின்னத்தம்பியின் மண்டையோடு உடைந்ததன் காரணமாகவும் அவருடைய கண் புருவம், காதுகளிலும் காயமுற்றதாலும் இரத்தம் பெருகியதால் மரணமானரென்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# ஷேக் அப்துல்லா

புதுடில்லி, மே 22

இங்கு மீண்டும் வந்துள்ள திரு. ஷேக்அப்துல்லா நேற்று பிரதமர் நேருவுடன் பேச்சுக்களை நடத்தினர்.

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் நேற்று பிரதமர் நேருவின் இல்லத்தில் திரு. ஷேக் அப்துல்லாவுடன் இரண்டு தடவைகள் பேச்சுக்களை நடத்தினர்.

இந்திய உப-ஜனாதிபதி திரு. ஸாகீர் ஹுசைனையும் ஷேக் அப்துல்லா நேற்று சந்தித்தார்.

# வெசாக் தினம்

கொழும்பு, வெள்ளி

வெசாக் விழா இம்முறை திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் கொண்டாடப்படும். வெசாக தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை சகல தவறணைகளும் மூடப்படும்.

இவ்விரு தினங்களிலும் இ. போ. சபை விசேஷ பஸ் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது. கொழும்பு நகரின் அழகைக் கண்டு களிக்கும் பொருட்டு விசேஷ விமானச் சேவைகள் நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லாவ, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரின் வெசாக் தினச் செய்திகள் திங்கட்கிழமை காலை 7-30க்கு ஒலிபரப்பப்படும்.

இம்முறை வெசாக் தினத்தை விரிவான முறையில் கொண்டாட நாட்டின் பல பகுதிகளிலும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வெசாக் விழா நிகழ்ச்சிகளில் பிரமாண்டமான பந்தல்கள் முக்கிய இடம் பெறுகின்றன. நாட்டின் பல பகுதிகளிலும் வெசாக் தினத்தை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பந்தல்கள் நிறுவப்பட்டுள்ளன. காலிமுகத்திடலில் 45 அடி உயரமான பந்தலொன்று அமைக்கப்படுகிறது. அத்திடியாவில் 60 அடி உயரமான பந்தலொன்று நிறுவப்பட்டுள்ளது.

திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் அரசாங்க வங்கி விடுமுறைகளாகும்.

# சுவரில் துளையிட்டு தப்ப முயற்சி

கம்புறுபிட்டிய, வெள்ளி

மூன்று கைதிகள் எவ்வாறு மாத்தறைச் சிறைச்சாலைச் சுவரில் துளையிட்டுத் தப்ப முயற்சித்தனர் என்பது பற்றி மாத்தறை மாவட்ட உதவி மாஜிஸ்டிரேட் விசாரணை நடத்திவருகிறார்.

கொலைசெய்ய முயன்றதாகக் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ள சரத், லக்ஷ்மன் ஆகிய இரண்டு கைதிகளும் சுவரில் துவாரமிட்டு வெளியே வந்து சிறைச்சாலையின் குட்டிச் சுவரைத் தாண்ட முயல்கையில் சிறைச்சாலை உயர்தர அதிகாரி ஒருவரால் கைதுசெய்யப்பட்டனர். சுவரில் துளையிட இவர்களுக்கு ஆயுதம் எவ்விதம் கிடைத்ததென்பதும், அதிகாரிகளுக்குத் தெரியாமல் எவ்வாறு இவர்களால் துளையிட முடிந்ததென்பதும் புரிந்து கொள்ளமுடியாத புதிராகவே உள்ளது.

# உலகத் தமிழ் மன்ற இலங்கைக் கிளை

யாழ்ப்பாணம், சனி

உலகத் தமிழ் மன்றத்தின் இலங்கைக் கிளை இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு உலகத் தமிழ் மன்றத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமை வகிப்பார்.

# இடதுசாரி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரி ஐக்கியமுன்னணியைப் பற்றிக் கவலைகொள்ளாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சமசமாஜக்கட்சி கூட்டுசேர்ந்து அரசாங்கம் அமைக்கவேண்டுமெனக் கோரும் தீர்மானம் மகாநாட்டில் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் கூட்டு அரசாங்கத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, டாக்டர் என். எம். பெரேரா, திரு. லெஸ்லி குணவர்த்தன ஆகிய மூவரும் மந்திரிப்பதவி பெறவேண்டுமென்று வற்புறுத்தப்படும் எனவும் தெரிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் லங்கா சமசமாஜக்கட்சியுடன் கூட்டு சேர்வதை ஆதரிப்பதால் இரண்டு கட்சிகளும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதில் சங்கடம் இருக்காது என்றும் கூறப்படுகிறது.


## ORDER NISI

In the District Courts of Jaffna.

In the matter of the intestate estate ofthe late Theogu Elias of Chulipuram.

Deceased.

Viyagula Mary widow of Theogu Elias of Chulipuram.

Petitioner.

No. T/1418 Vs.

1. Thaveethu Anthonimuthu, and
2. wife Loorthamma both of Chulipuram.
3. Elias packianathan of Chulipuram.
4. Thaveethu Thiruchelvam, and
5. wife Sinnamalar both of Chulipuram.

Minors. 6. Elias Arulnathan of do of the age of 19 years. 7. Elias Jeganathan of do of the age of 16 years.

minors appearing by their Guardian-ad-litem the 3rd Respondent.

Respondents.

This matter coming on for disposal before T. Muttusamippillai District Judge, Jaffna on the 23rd day of December 1963 in the presence of Mr. T. Sangarappillai, Proctor on the part of the Petitioner and the affidavit of the petitioner dated 8th October 1963 having been read.

It is ordered that the 3rd Respondent abovenamed be appointed Guardian-ad-litem over the 6th and 7th minor Respondents abovenamed for the purpose of these proceedings.

In is further ordered that the petitioner abovenamed be declared entitled as the widow of the deceased abovenamed to have Letters of Administration to the estate of the said deceaed issued to her accordingly unless the Respondents abovenamed or any other person or persons interested shall on or before the 13th day of March 1964 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Jaffna this 23rd day of December 1963.

Sgd. N. Sivagnanasundram. District Judge, Jaffna.

Drawn by, Sgd. T. Sangarappillai. Proctor for Petitioner. 13-3-64.

Time to show cause extended to 29th May 1964.

(Sgd) N. Sivagnanasundaram. District Judge, Jaffna.



### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருக்கும் 6-ம் இலக்க கடைக் கட்டடம் வாடகைக்குக் கொடுக்கப்படும். 80, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 434


# வாடி வீடுகள்மூலம் ரூ. 64,000 நிகரலாபம்

கொழும்பு, வெள்ளி

வாடி வீடுகளின்மூலம் அரசாங்க யாத்திரிகர் சங்கத்துக்கு 64,000 ரூபா நிகரலாபம் கிடைத்துள்ளது. வாடி வீடுகளை நடத்துவதன்மூலம் கடந்த எட்டுவருட காலமும் இச் சங்கத்திற்கு நஷ்டமே ஏற்பட்டது. ஆனல் 1963-64 நிதிவருடத்தின் முதல் ஆறு மாதகாலத்தில் இச் சங்கம் அதிகமான பணத்தை நிகரலாபமாகப்பெற்றுள்ளது.

# முருகமூர்த்தி கோவில் பூங்காவனத் திருவிழா

யாழ்ப்பாணம், சனி

சங்கானை வேலவில் முருகமூர்த்தி கோவில் பூங்காவனத் திருவிழா வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. இவ் விழாவையொட்டி இசை நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்னதானமும் வழங்கப்படும்.


## விளம்பரம்

### விற்பனைக்கு

16 மில்லி மீட்டர் அளவு துவாரமுள்ள பெல்ஜியம் துப்பாக்கி நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. லைசன்ஸ் உள்ளவர்களுக்கே விற்கப்படும். விபரம்: எஸ். பொன்னுத்துரை, 'கருணவாசா', அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 439

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்

சகல அரியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்

GABRIELS, Chunnakam. 278

### நொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பேர்களுள் அடங்கிய கற்றவை இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### ஏஜென்ஸ் தேவை

பக்கற்றுகளில் அடைக்கப்பெற்ற எங்கள் பிளாஸாத் தேயிலையை யாழ்ப்பாணத்திலும் அதனைச் சார்ந்த ஏனைய இடங்களுக்கும் வியாபாரம் செய்யத் தகுந்த ஏஜென்ஸ் தேவை. நல்ல சம்பளமும் கமிஷனும் உண்டு. ஸ்ரோர் வசதியும் வானும் கொடுக்கப்படும். ஐந்து, பத்து கீழ்ப்பட்ட வேலையாட்களைக் கொண்டு நடாத்தும் திறமையுள்ளவர்களும, பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு— கொழும்பு தேயிலைக்கொம்பனி, A.V.R.A. பில்டிங், 19, செட்டியார் தெரு, கொழும்பு 11. 432

### தேவை

யாழ்ப்பாணம் டவுனில் நல்ல முறையில் ஆரம்பிக்கும் எலெக்ரோ பிளேட்டிங் கம்பெனிக்கு நல்ல திறமையும் அனுபவமுள்ள பொலிஷிங் & பிளேட்டிங் தெரிந்த திடகாத்திரமுள்ள வாலிபர்கள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும். நடன முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 435

### காணி விற்பனைக்கு

2 1/2 பரப்புள்ள வளவும் வீடும், யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவிலுள்ள, அமெரிக்க நூல் நிலையத்திற்கு எதிராக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளும் விலாசம்: B. K. சோமசுந்தரம், "Soma Vasa", NO. 6, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 436

### நன்றி நவிலல்

எமது தந்தை செ. தம்பையா அவர்களின் மரணத்தின்போது சமூகமளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், உதவிகள் புரிந்தும் எம்மை ஆதரித்தவர்களுக்கு எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

த. செல்லப்பா ஆசிரியரும் குடும்பத்தினரும், 25/4, முதல் ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 21-5-64. 437



## SCHOOL OF TECHNOLOGY, JAFFNA.

### 1964--65 COURSES

**Candidates with J. S. C. (English or Tamil Medium)**

Electrical Installation
Motor Mechanism
Radio Servicing
— One year Course Theory & Practical

**Candidates with G C E. (with passes in Maths, Physics & English**

Electrical Engineering Practice Preliminary
Electrial Engineering Practice Intermediate
Electrial Engineering Practice Final
— City & Guilds Lond. Exams.

A. M I. E. E. (Part 1). Institution of Electrical Engineers Lond.

Candidates with G C. E. (with Maths, English and preferably Drawing or Art.)

Authorised Draughtsmen--Surveyor General Exm,
Civil Engineering Drawing
Building Construction
— School Certificate.

Applications close on June 1, 1964. Courses commence on June 15. For further particulars & forms apply to:

"Citadel'
Chundikuli, Jaffna.
8-5-64.

Director

யாழ்ப்பாணத்தில்

# புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிறுவப்படவேண்டும்

## நிவாரண சங்கத் தலைவர் கோரிக்கை

சுழிபுரம், வியாழன்

'வடபகுதியில் புற்று நோயாளர்களின்தொகை அதிகரித்த வண்ணமிருக்கிறது. இந்நோயினால் பீடிக்கப்பட்டு அவதியுறுவோர்க்கு இங்கு தகுந்த சிகிச்சை வசதிகள் அளிக்கப் இயலாதிருக்கிறது. இங்கிருந்து மஹரகமவில் உள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்திற்குச் சிகிச்சை பெறச் செல்வதில் நோயாளர்கள் பெரும் கஷ்டமுறுகின்றனர். எனவே கூடிய விரைவில் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமொன்றினை நிறுவ அரசினர் முன்வரவேண்டும்' என்று யாழ்-மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் நேற்று மாலை நடைபெற்ற பிரஸ்தாப சங்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் வடபகுதியில் புற்றுநோய்த் தடுப்புப் பிரசாரத்தினைத் தீவிரப் படுத்த வேண்டியது அவசியமென்றார்.

### வெற்றிலை காரணம்

மஹரகம புற்றுநோய்ச்சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர். ஜுக் பேசுகையில் புற்று நோய் இன்று இலங்கையில் முக்கிய சுகாதாரப் பிரச்சினைகளிலொன்றாக விருக்கிறதென்றும் அறியாமையின் மூலமே இந்நோய் அதிகரித்து வருவதாகவும் கூறினர். யாழ்ப்பாணப் பகுதியில் வெற்றிலை பாவிப்போர்களே பெரும்பாலும் இந் நோயினால் பீடிக்கப்படுவதாகவும், பொதுமக்கள் இவ்விஷயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அவசியமென்றும் கூறினர்.

வடபகுதி சுகாதார சேவை அதிபர் டாக்டர் ஜி. என். ஆர். நதானியல், சமூக ஜோதி, கேட் முதலியார் சி. தியாகராசா, டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், திரு. எம். ஆர். எம். ஜெயரத்தினம் ஆகியோருட்படப் பலர் பேசினர். இலங்கைப் புற்று நோய் நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் சந்திரசேகராவை இங்கு அழைத்துப் பிரசார இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்வதெனவும், பொருட்காட்சிகள் ஆதியனவற்றை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

# வேலணை மருந்துச்சாலையில் மக்கள் படும் கஷ்டம்

வேலணை, வியாழன்

வேலணை அரசினர் மருந்துச்சாலைக்கு தினமும் பல நூற்றுக் கணக்கான நோயாளர்கள் வந்து மருந்து எடுத்துச் செல்வதால் எந்நேரமும் நெருக்கடியாக உள்ளது. போதிய இடவசதியும் ஊழியர்களும் இல்லாத காரணத்தால் மருந்து எடுப்பதற்காக பலர் வெகுநேரம் வரை வெளியிலும் வீதியிலும் வெய்யிலில் நிற்க வேண்டி உள்ளது. அனலைதீவு, நாரந்தனை மங்கும்பான் ஆகிய இடங்களில் இருந்தும் வேலணை மருந்துச் சாலைக்கு நோயாளர்கள் வருகின்றனர். மருந்துச் சாலை இருக்கும் கட்டிடம் இடவசதி குறைவாக இருப்பதால் மருந்துச் சாலையை பிரசவ விடுதியுடன் இணைத்து ஆஸ்பத்திரியின் தரத்துக்கு உயர்த்தித் தருமாறுகோரி பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

### ஐக்கிய பண்டகசாலை ப. நோ. கூ. சங்கமாகியது

ஊர்காவற்றுறை, வியா.

கமத் தொழில், கடன் வசதி ஒப்பந்த வேலைகள், கைத்தொழில் அபிவிருத்தி என்பனவற்றை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் காரைநகர் வடக்கு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள சிவகாமி அம்மாள் பண்டகசாலைச் சங்கத்தை பல நோக்கு கூட்டுறவுச் சங்கமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. க. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மாத பண்டகசாலை சங்கக் கூட்டத்தில், ஐக்கிய பரிசோதகர் திரு. எம். கந்தையா உரை நிகழ்த்துகையில் பல நோக்கு சங்கத்தின் நோக்கங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இக் கூட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உப விதிகள் ஏற்றுக் கொள்ளப் பட்டதோடு சங்கத்தின் வெளிக் கடன் எல்லை ரூபா ஒரு லட்சமாக இருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### பெற்றார்—ஆசிரியர் சங்க கூட்டம்

வேலணை, வியாழன்

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கம் அண்மையில் கூடியபோது கல்வி இலாகாவால் வித்தியாசாலைக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் ரூபா 8000த்துக்கு கட்டட வேலைகளை பூர்த்தி செய்வதென்றும் அதன் பொறுப்பை நிர்வாக சபையிடம் விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. பாடசாலை தலைமையாசிரியர் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

மேற்படி தொகையை பாடசாலைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு உதவிய கிராமசபை அங்கத்தவர் ச. சபாரத்தினத்திற்கும், கிராமசபைக்கும்,பாராளுமன்ற உறுப்பினருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது.

---

### விவசாயிகள் மகாநாடு நடத்த திட்டம்

உடுப்பிட்டி, வியாழன்

கிராம ரீதியில் விவசாயிகள் கூட்டங்களைக் கூட்டுவதற்கும் அதைத்தொடர்ந்து விரிவான விவசாயிகள்-விவசாய தொழிலாளர் மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்குமான ஆலோசனைக் கூட்டம் நெல்லியடி விவசாயிகள் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றது,

இம்மகாநாட்டிற்கான தயாரிப்புக் கமிட்டி டாக்டர் சு. வே. சீனிவாசகம் தலைமையில் திரு. வி. ஏ. கந்தசாமியை அமைப்பாளராகக்கொண்டு இயங்கி வருகிறது.

---

லண்டன், மே 22

காமன்வெல்த் தினத்தை முன்னிட்டு இம்மாதம் 24-ம் திகதி இங்கு நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளில் இலங்கையிலிருந்து வந்த கண்டிய நடனக் குழுவினரின் நடனமும் இடம்பெறும். இந்நிகழ்ச்சிகள் லண்டனிலுள்ள காமன்வெல்த் நிலையத்தில் நடைபெறும்.

### ஆஸ்பத்திரியில் முருகன் ஆலயம்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலை வளவினுள் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ முருகன் ஆலய மகாகும்பாபிஷேகம் இம்மாத இறுதிக்குள்ளாக நடைபெறவிருக்கிறது. கும்பாபிஷேக ஒழுங்குகளையும், நிதி திரட்டும் பணியையும் மேற்கொள்ள டாக்டர்கள், அப்போதிக்கரிமார், மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களைக் கொண்ட திருப்பணிச் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. திருப்பணிச்சபை அங்கத்தவர்களின் விபரம் வருமாறு:-

பஞ்சாயத்தினர்கள்: டாக்டர் க. மாணிக்கம், திரு. மு. சோமகேசன், திரு. செ. தட்சணமூர்த்தி, திரு. த. செல்லத்துரை, திரு. இ. கந்தசாமி.

தலைவர்: திரு. தோ. அரசரத்தினம். காரியதரிசி: திரு. கு. நாகையா. தனாதிகாரி: திரு. க. முத்தையா. போஷகர். திரு. க, முருகப்பிள்ளை. பரிசோதகர்: திரு. சீ. செல்லையா. மற்றும் 19 பேரைக் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

### பணத்தையிழந்தவர் தற்கொலை

ஜா-எல, வியாழன்

தனது மாதாந்த சம்பளத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த பேர்ஸை பிற்பொக்கட் திருடரிடம் பறிகொடுத்ததால் மனமுடைந்து, எதுவித ஆகாரமும் உட்கொள்ள மறுத்துவந்த ருகமவைச் சேர்ந்த ஏ. டி. விஜயவர்த்தன என்பவர், இறுதியில் அவரது வீட்டின் பின்புறத்திலுள்ள மரமொன்றில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

ஜா-எல மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. ஆர். பி ஜெயசிங்கா மரணவிசாரணையின்பின் தற்கொலையால் மரணம் சம்பவித்ததென தீர்ப்பளித்தார்.

---

பெட்ரோலிய

### வர்த்தகர்களுக்கு பயிற்சி

கொழும்பு, வியாழன்

பெட்ரோல் விநியோக நிலையங்களில் வர்த்தகர்கள் திறமையான வகையில் சேவை செய்வதற்கு வழிவகுக்குமுகமாக இத்துறையிலீடுபட்டுள்ள வர்த்தகர்களுக்கு கொலன்னாவையில் பயிற்சி அளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. 2000 வர்த்தகர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. ஒரு தடவையில் 100 வர்த்தகர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். நாளை முதல் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

---

### உத்தியோகஸ்தர்களுக்கு பயிற்சி

கொழும்பு, வியாழன்

உணவு கூட்டுறவு விவசாய இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு சேவையிலேயே சம்பந்தப்பட்ட துறையில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 28-ம் திகதியிலிருந்து அடுத்தமாதம் 18-ம் திகதிவரை இந்தப்பயிற்சி அளிக்கப்படும். 3 வெளிநாட்டு நிபுணர்கள் இவர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
World's Night Shows
SEXY al NEON
Techniscope color (Adults Only)

# ரயில் வண்டி தடம்புரண்டது

கொழும்பு, வியாழன்

கணேவத்தைக்கும் மகோவுக்கு மிடையில் இன்று பிற்பகல் சாமான்களை ஏற்றிவந்த ரயில் வண்டி தடம்புரண்டது. இதன் காரணமாக புகையிரத நேரடிச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. ரயில் பிரயாணிகளின் போக்குவரத்து இதனால் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

### யாழ்தேவி தாமதம்

நேற்று இரவு 9-45க்கு யாழ்ப்பாணம் வரவேண்டிய யாழ்தேவி பாதை சீராக இல்லாததால் சுமார் மூன்றரை மணி நேரம் பிந்தி வந்து சேர்ந்தது.

---

### இசைமன்ற ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தாவடி இந்து சமய அபிவிருத்திச் சபையின் ஆதரவில் நடக்கும் திருமுறை இசை மன்ற முதலாவது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சொற்பொழிவுகளும், இசைக் கச்சேரிகளும் இவ்விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

---

### 'ஷேட்' தயாரிப்போருக்கு பாதுகாப்பு

கொழும்பு, வியாழன்

உள் நாட்டுப் காலணிகள் செய்வோர் இறக்குமதி செய்யப்படும் கன்வசுக்கும், 'ஷேட்' தயாரிப்பாளர்களால் இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கும், அரசாங்கத்தால் பாதுகாப்பளிக்கப்பட விருக்கிறது.

### துங்குவின் சமரச முயற்சி

கோலாலம்பூர், மே 21

இந்தோனேஷியா, மலேசியாவிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ்பெற்றால் அமைச்சர்கள் ரீதியிலான பேச்சுவார்த்தை நடத்தக்கூடியதாக இருக்குமென மலேசியா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

---

### மற்றுமொரு குண்டு வெடித்தது

ஸ்ரீநகர், மே 16

ஸ்ரீநகரிலிருந்து 45 மைல் தூரத்திலுள்ள ஒரு மாஜிஸ்திரேட் வீட்டுக்கருகில் வெடிகுண்டு வெடித்தது என்று அறிவிக்கப்படுகிறது. இத்த விபத்தில் மாஜிஸ்திரேட் காரியாலயம் சிறிதளவு சேதமடைந்துவிட்டது.

---

பொன், மே 22

நேபாள மன்னர் மகேந்திராவும், இராணி இரத்தினவும் இங்கு வந்து சேர்ந்தனர்.

ஐம்பெருங் காப்பியங்களில் மகத்தான
'சிலம்புச் செல்வி'
யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் மே மாதம் 23-ம் திகதி நகரசபை மேயர் திரு. ரி. எஸ். துரைராசா அவர்கள் தலைமையிலும் மே மாதம் 24-ந் திகதி செனட்டர் எஸ். நடேசன் அவர்கள் தலைமையிலும் மாலை 6-30 மணிக்கு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக ஆதரவில் வித்தியாலய மாணவிகள் பெருமையுடன் அளிக்கும்
"சிலம்புச் செல்வி"
அனுமதிச்சீட்டு விபரம்:-
பிரத்தியேகம் ரூ. 25-00. முதலாம் வகுப்பு ரூ. 10-00
இரண்டாம் வகுப்பு ரூ. 5-00. மூன்றாம்வகுப்பு ரூ. 2-00
ரிக்கட்டுகள் வேம்படி மகளிர் கல்லூரி அதிபரிடமும், இல.8, பழைய பூங்கா-வீதியிலும் பெற்றுக்கொள்ளலாம். 284

அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

இப்போழுது காண்பிக்கப்படுகிறது
கிங்ஸ்லி
(கொழும்பு)



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
நாடோடி மன்னன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — பண்டரிபாய்
நடித்த
பராசக்தி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 23-ந் திகதி அச்சிட்டுவெளியிடப் பட்டது.